பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை 29.06.2025 கதிர் 232

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கில் காணி அபகரிப்புத் தொடர்பில் மார்ச் 28 விடுத்த வர்த்தமானி அறிவித்தலை வெள்ளிக்கிழமைநீக்குவதாக உயர் நீதிமன்றத்தில் ☞2

# செம்மணி புதைகுழியில் மேலும் 3 எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



செம்மணி மனித புதை குழியில்நேற்றுமேலும்மூன்று மனித எலும்புக்கூட்டுகளும் மேலும் சில மனித எலும்பு எச்ச சிதிலங்களும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

செம்மணிமனிதபுதைகுழியில் ☞2

## செம்மணிப் புதைகுழி தொடர்பில்சர்வதேச விசாரணை வேண்டும்

### செங்கலடி பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்.செம்மணிபுதைகுழிகுறித்து சர்வதேச விசாரணை நடாத்துமாறு கோரிகொண்டுவரப்பட்டபிரேரணை ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் முதலாவது அமர்வில் எந்தவித எதிர்ப்பும் இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

மட்டக்களப்பு செங்கலடி ☞2

## சீர்திருத்தங்களுக்குப் பதிலாக நாட்டை புதிய நிலைக்கு உயர்த்துவதே திட்டம்

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

தற்போதைய ஆளும்தரப்பின் நோக்கம், தற்போதுள்ள முறைமைக்கு ஏற்ப சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, நாட்டை புதிய நிலைக்கு உயர்த்துவதாகும் என்று ஜனாதிபதி அனுரகுமார ☞2

## நாடாளுமன்றம் நாளை அவசரமாகக் கூடுகிறது

நாடாளுமன்றம் வரும் திங்கட்கிழமை ஜூன் 30 அவசரக் கூட்டத்திற்காகக் கூடஉள்ளது.

பிரதமரின்வேண்டுகோளின்பேரில்,நிலையியற் கட்டளைகளின் 16 இன்படி அவசரக் கூட்டம் கூட்டப்படும் என்று சபாநாயகர் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார். ☞2

### இலங்கைப் போர்க்குற்ற விசாரணைகளில்

# உள்ளகப் பொறிமுறை ஊடாக முன்னேற்றம் இல்லை வோல்கர் டர்க் அதை ஆணித்தரமாகச் சொல்லவேண்டும்

## தமிழ் அரசின் செயலாளர் சுமந்திரன் வலியுறுத்து

இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்ளகப்பொறிமுறைகள் ஊடாகஎவ்விதமுன்னேற்றமும் அடையப்படவில்லை என்ற விடயத்தை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள்உயராணையர் பேரவையின்60ஆவதுகூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ள



தனது அறிக்கையில் அவசியம் ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் ☞2

## மக்கள் நிலங்களைச் சட்டவிரோதமாக கைப்பற்றி யாழ். ஜனாதிபதி மாளிகை

### நகர அபிவிருத்தி அமைச்சின் விசாரணையில் தெளிவு

நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணையில், யாழ்ப்பாண மக்களின் நிலங்களை சட்டவிரோதமாக கையகப்படுத்தி யாழ்ப்பாண ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டது தெரியவந்துள்ளது.

இதனால் ஜனாதிபதி மாளிகையை முதலீட்டாளரிடம்ஒப்படைப்பதில்சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிமாளிகைஅமைந்துள்ள ☞2

## சிங்களத்தில் ஒன்றும் ஆங்கிலத்தில் ஒன்றும் கூறாதீர் தமிழருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுக

### ஆளும்தரப்புக்கு திஸ்ஸ விதாரண அழுத்தம்

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றுதாக குறிப்பிடுவது முறையற்றது. நாட்டு மக்களுக்கு சிங்கள மொழியில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு,சர்வதேசத்துக்கு ஆங்கில மொழியில் பிறிதொன்றை குறிப்பிட்டு காலத்தை கடத்தும் வகையில் ஆளும்தரப்புச் செயற்படுகிறது. தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டத்தின் பிரகாரம் ஆளும்தரப்புநிறைவேற்றவேண்டும்என லங்காசமசமாஜக்கட்சியின்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற ☞2


## காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி கைவாங்கப்பட்டது

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவற்றை அரசுடமையாக்கும் வகையில் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், அரசாங்கத்தினால்வெள்ளிக்கிழமை (27) இரவு வெளியிடப்பட்ட 2443 எனும் இலக்க வர்த்தமானியின் ஊடாக நீக்கப்பட்டுள்ளது.

காணிகளைக்கையகப்படுத்தும் வர்த்தமானிஅறிவித்தலுக்குஎதிராக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படைஉரிமைமீறல்வழக்கில், 2430 இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.அந்த வழக்கில் வெள்ளிக்கிழமை வர்த்தமானி அறிவித்தலை திரும்பப்பெறப்படும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

அதன்படியே வெள்ளிக்கிழமை இரவு வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ளது.

## நாகதம்பிரான் ஆலயம் பலாலியில் விடுவிப்பு



யாழ்ப்பாணம் பலாலிநாகதம்பிரான் ஆலயம் 35 வருடங்களின் பின்னர் மக்கள் பாவனைக்காக முழுமையாக வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளது.

கோவில் அமைந்துள்ள பகுதி இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து வந்தது. ஜூன் 23 ஆலயத்தில் விக்கிரகங்கள் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

# கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்றவர் ஆலய வாசலிலேயே மோட்சம் எய்தினார்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச் சன்னதியில் இருந்து கதிர்காமத்தைச் சென்றடைந்த பாதயாத்திரை குழுவில் ஒருவர் நேற்று கதிர்காமத்தில் திடீரென மயங்கி வீழ்ந்து மோட்சம் எய்தினார்.

புத்தளம் உடப்பு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.பொன்னம்பலம்(வயது 52)என்பவரே இவ்வாறு திடீர் முக்தி பெற்றார்.

மே மாதம் முதலாம் திகதி உடப்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதிக்கு அங்கிருந்து புறப்பட்ட பாதயாத்திரையில் கலந்துகொண்டவர் என பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

அவர் பாதயாத்திரை செல்வது மூன்றாவது தடவை ஆகும்.56 நாட்கள் பயணத்தின் பின்னர் அவர் கதிர்காமத்தை வந்தடைந்த போது அவரது மனைவி பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பத்தினர் பஸ்ஸில் கதிர்காமம் வந்தனர்.

நேற்று 11 மணியளவில் குடும்பத்தினர் சகிதம் கதிர்காமம் ஆலயத்துக்குள் பிரவேசித்த பொழுது திடீரென மயங்கிச் சரிந்து விழுந்தார். உடனடியாக அவரை கதிர்காமம் வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தனர். ஆனால் அவர் இயற்கையெய்திருந்தார்.

அவரது உயிர் பிரிந்ததற்கான காரணம் மாரடைப்பு என்று வைத்தியசாலையில் கூறப்பட்டுள்ளது. உடல்-கூறாய்வுகளுக்குப் பின் அவரது பூதவுடல் உடப்பிற்கு கொண்டு செல்லப்பட இருக்கிறது என்று பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

# உள்ளகக் கட்டமைப்பு சுயதீனமாதெனில் அயலுறவு அமைச்சினது தலையீடு ஏன்?

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை அயலுறவுத்துறை அமைச்சின் தலையீடு இன்றி உயராணையர் வோல்கர் டர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்கவேண்டும் அல்லவா? என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண கேள்வி எழுப்பியுள்ளார்.

உத்தியோகபூர்வபயணமாக இலங்கைக்கு வருகைதந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் கடந்த செவ்வாய்க்கிழமை (24) நீதியமைச்சு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பொறுப்புக்கூறலுக்கான உள்ளகப்பொறிமுறை மற்றும் நல்லிணக்க செயன்முறை குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை வெளிவிவகார அமைச்சின் தலையீடு இன்றி உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்கவேண்டும் அல்லவா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாறாக வெளிவிவகார அமைச்சு அல்லது நீதியமைச்சு உள்ளடங்களாக ஆளும்தரப்பின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நிகழக்கூடிய சந்திப்பில் தமது கட்டமைப்புக்களுக்கு ஆளும்தரப்பினால் வழங்கப்படும் ஆதரவு குறித்தோ அல்லது போதியளவு ஆதரவு வழங்கப்படாமை குறித்தோ காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட கட்டமைப்புக்களின் அதிகாரிகளால் எவ்வாறு பிரஸ்தாபிக்கமுடியும்? என்றும் த்யாகி ருவன்பத்திரண விசனம் வெளியிட்டுள்ளார்.

## இனி இது .....

வாக்குறுதியளித்திருந்தது ஆளும்தரப்பு. இந்த வாக்குறுதி மீது நீதிமன்றத்திற்குப் போதிய நம்பிக்கை இருக்காத காரணத்தால் அந்த வர்த்தமானிக்கு இடைக்காலத் தடையையும் அது விதித்திருந்தது. ஆனால், வாக்குறுதியளித்தபடி அந்த வர்த்தமானி அறிவித்தலை வெள்ளிக்கிழமை ஆளும்தரப்பு வெளியிடவில்லை என்று நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அது தவறு. அந்த வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு தான் உறுதியளித்தபடி வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

வெள்ளி நள்ளிரவு விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களை எல்லாம் நான் பார்வையிட்டிருந்தேன். காணி தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிடிஎவ் வடிவத்தையும் பார்த்திருந்தேன். ஆனாலும் அந்த அறிவித்தலின் கடைசிப் பக்கத்தில் (29ஆவது பக்கம்) இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. முன்னால் இருந்த 28 பக்கங்களிலும் ஒரே மாதிரியான காணி அறிவிப்புக்கள் இருந்த காரணத்தால் இந்தக் கடைசிப் பக்கத்து அறிவித்தலை சரிவரக் கவணிக்கத் தவறிவிட்டேன். அது என் தவறுதான். இந்த விடயத்தில் ஆளும் தரப்புத் தான் சொன்னதை நிறைவேற்றியுள்ளது.

அதேநேரம் அந்த அறிவிப்பும் சுத்தமானதாக இருக்கவில்லை. மார்ச் 28 வர்த்தமானியை நீக்குவதாகக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பில், "முன்னைய வர்த்தமானி அறிவித்தல் அரசின் கொள்கை முடிவுக்கு அமைய நீக்கப்படுகின்றது. மேற்படி காணிகள் உள்ள பகுதிகளில் நிலவும் குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும் இந்தக் காணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்கு போதுமான வாய்ப்பை வழங்குவதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது.

அதாவது இந்த வர்த்தமானியை இப்போதைக்கு மீளப் பெற்றுக்கொண்டாலும் போதிய கால அவகாசம் கொடுத்து அதனை மீளவும் கொண்டுவருவோம் என்று அதனை அர்த்தப்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும் சட்டத்தின்படி 3 மாத கால அவகாசத்தைத்தான் கொடுக்கமுடியும். இந்தக் காணிகளை அரசுடமையாக்குவது குறித்து மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் விடுத்தால் அதுவும்கூட மூன்று மாத கால அவகாசத்தையே கொண்டிருக்க முடியும். அப்படியிருக்கும்போது போதிய கால அவகாசம் என்பதன் மூலம் ஆளும்தரப்பு எதைக் குறிப்பிடுகின்றது என்பது தெளிவில்லை.

காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானியை மீளப்பெறுவது என்பது அரசின் கொள்கை முடிவு என்று இந்த வர்த்தமானி மூலம் அறிவித்த பின்னர், அந்தக் கொள்கை முடிவு மாறுவதற்கான சூழல் அல்லது காரணம் என்னவென்று குறிப்பிடாமலேயே மீண்டும் கால அவகாசம் கொடுத்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவோம் என்று மிரட்டுவது ஒன்றுக்கொன்று முரணானது. கால அவகாசம் போதாது என்று மார்ச் மாத வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவது என்ற முடிவை ஆளும்தரப்பு எடுத்திருந்தால் அது நிர்வாக முடிவே தவிர கொள்கை முடிவு அல்ல. வடக்கில் காணிகளை அரசுமையாக்கும் வர்த்தமானியை மீளப்பெறுவது என்பதுதான் அரசின் கொள்கை முடிவாக இருக்க முடியும். ஏன் இந்த முரண்பாடு என்பதும் புரியவில்லை.

அரசியலுக்கும் சிங்கள, பௌத்த பொறிமுறைக்குள் நிற்கும் பொது நிர்வாகத்திற்கும் இடையிலான முரணையே இந்த வர்த்தமானி அறிவித்தல் மீண்டும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளகப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறல் நிலவரம் குறித்து உயராணையர் வோல்கர் டர்க் வெளியிடவிருக்கும் அறிக்கை மிகக் காத்திரமானதாக அமையவேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் உள்ளகப்பொறிமுறை ஊடாக எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை என்றும், ஆகையினால் அதில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என்றும் உயராணையர் தனது அறிக்கையில் வலியுறுத்தவேண்டும்.

இலங்கைக்கு மூன்று நாள்கள் பயணமாக வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க், கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பிரதம நீதியரசர், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியதுடன் திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கும் வருகைதந்து, அங்கும் பலதரப்பட்ட குழுக்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதுமாத்திரமன்றி பயணத்தின் நிறைவு நாளன்று கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பில், சர்வதேசத்தின் ஆதரவுடன் உள்ளகப்பொறிமுறையை வலுப்படுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல் நிலவரம் தொடர்பில் உயராணையர் வோல்கர் டர்க் வெளியிடவிருக்கும் அறிக்கை மிகக் காத்திரமானதாக அமையவேண்டும் என சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

முதன்முதலாக 2012ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு தான் கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், உள்ளகப்பொறிமுறை ஊடாக எதனையும் செய்யமுடியாது என்பதைப் பேரவை புரிந்துகொண்டது. அதனையடுத்து 2014 ஆம் ஆண்டிலேயே இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு இலங்கை ஆளும்தரப்பின் அனுசரணையுடன் பேரவையின் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே நாட்டில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டது.

அதன் விசாரணை செயன்முறைகளில் சர்வதேசத்தின் பங்கேற்பை உள்வாங்கக்கூடிய வகையிலேயே அதற்குரிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் அலுவலக செயன்முறைகளில் சர்வதேசத்தின் பங்களிப்பை உள்வாங்குவதற்கு எந்தவொரு ஆளும்தரப்பும் இடமளிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் உள்ளகப்பொறிமுறை ஊடாக எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை என்றும், ஆகையினால் அதில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என்றும் உயராணையர் அவரது அறிக்கையில் வலியுறுத்தவேண்டும்.

இலங்கை விவகாரத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாமல், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, பாதுகாப்புச்சபை உள்ளிட்ட ஏனைய கட்டமைப்புக்களுக்குள் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளார்.

## நாகதம்பிரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிஷ்டை செய்ய படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். ஆலயத்திற்கு நிர்வாகத்தினர் மாத்திரம் சென்றுவருவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது

நேற்றைய தினம் ஆலயத்திற்குச் செல்லத் தடையாக இருந்த முட்கம்பி வேலிகள் அனைத்தும் அகற்றப்பட்டு ஆலயத்தில் பூசை வழிபாடுகள் செய்வதற்கும் எந்த நேரத்தில் எவரும் சென்று வருவதற்கும் ஏற்ற வகையிலான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் நேற்று ஊர் மக்கள் கூடி பொங்கல் பொங்கி வழிபட்டனர்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராண்டாம்கட்ட அகழ்வுப்பணியின் மூன்றாம் நாள் நேற்று இடம்பெற்றது. ஏற்கனவே 24 மனித எலும்புகூ-டுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 22 எலும்பு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, செய்மதிப் படங்கள் ஊடாக மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் அகழ்வு பணிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அப்பகுதிகளை துப்புரவு செய்யும் பணிகளும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் மனிதப் புதைகுழி காணப்படும் இடத்தில் உள்ள மண்ணை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அகழ்வாளர்கள் நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். அதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் கொழும்பில் இருந்து இதற்கென ஒரு குழு வருகை தரும் என்று தெரிவிக்கப்பட்டது.

அகழ்வுபணிகளுக்கான செலவீனபாதீடாக 12 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும், அதற்கு அண்மித்த தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் கன்னி அமர்வு கடந்த 26 ம் திகதி நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தவிசாளர் முத்துப்பிள்ளை முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அமர்வின் போது தமிழ் அரசுக் கட்சியின் உப தவிசாளர் சர்வானந்தன் அவர்கள் விசேட பிரேரணை ஒன்றை கொண்டு வந்திருந்தார்.

அதாவது யாழ். செம்மணி புதைகுழியில் தற்போது வரை பல மனித எலும்புக் கூடுகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் குறித்த எழும்புக் கூடுகள் யாருடையது? எந்த காலத்திற்குரியது என்பதை கண்டுபிடிப்பதற்கு சர்வதேச விசாரணை ஒன்றை நடாத்த வேண்டியது அவசியமாகும்.

தற்போது வடகிழக்கில் செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை இந்த சபையில் நிறைவேற்றி அதனை இலங்கை அரசுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை ஆணையாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மூவின மக்களின் பிரதிநிதிகளை கொண்ட ஏறாவூர் பற்று பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, கிழக்கு தமிழர் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, மற்றும் சுயேட்சை குழுக்கள் என தமிழ், முஸ்லீம், சிங்களம் உட்பட 32 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் மேற்படி பிரேரணை எந்த வித எதிர்ப்பும் இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன்படி வடகிழக்கில் தமிழரசுக் கட்சியின் ஆட்சியமைத்துள்ள உள்ளூராட்சி சபைகளில் செம்மணி குறித்து நிறைவேற்றப்பட்ட முதலாவது தீர்மானமாக இத் தீர்மானம் கருதப்படுகிறது. இதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்ட அரச கட்டமைப்பு ஒன்றின் ஊடாக செம்மணி புதைகுழிக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தேனினும் இனிய திருவாசகத்தை வாசகர் வளங்கினார் !

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும்
தேனினும் இனிய திரு வாசகத்தை
வானவர் வாழ்த்தினர் வையத்தார் போற்றினார்
மனுக்குலம் தளைத்திட மருந்தாய் ஆனது

மணி மணியான வார்த்தைகள் கோர்த்த
பக்திப் பூக்கள் பலபல இணைந்த
செந்தமிழ் மாலையாய் திரு வாசகத்தை
எம்பிரான் ஏற்றிடச் சாற்றினார் வாசகர்

இரக்கம் உருக்கம் எளிமை பணிவு
இதுவே வாசகர் இயல்பாய் அமைந்தது
உளத்தைத் திருத்த உயர்வாம் கருத்தை
அளித்தார் வாசகர் அரனின் அருளால்

அரசன் அழைத்து அமைச்சர் ஆக்கினான்
அரச பதவியில் அமர்ந்தார் வாசகர்
ஆடம் பரங்கள் அணுகிடா வண்ணம்
அரனின் நினைப்பை அகத்தில் அமர்த்தினார்

தாமரை இலையில் தண்ணீர் போல
பூவுல வாழ்வினை வாசகர் வாழ்ந்தார்
பற்றிலா இருந்தார் பற்றினார் சிவனை
பக்குவம் நிறைந்திடப் பக்தியைப் பாடினார்

எல்லா மதமும் ஏற்றிடப் பாடினார்
எல்லாக் கருத்தும் இருந்திடப் பாடினார்
எல்லா மனங்களும் திருந்திடப் பாடினார்
இறைவன் விரும்பிட திருவாசக மீந்தார்

செந்தமிழ் சிறந்தது செந்திரு ஒளிர்ந்தது
அந்தமும் இல்லான் ஆதியும் இல்லான்
ஆட்கொண்ட கருணை ஆழமாய் தெரிந்தது
அடியார் வாசகர் அளித்த நல்வாசகம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்
மெல்பேண்-
ஆஸ்திரேலியா

# சிஐடி பணிப்பாளராக ஷானிக்கு நியமனம்

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் (ஸீஐடி) புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி இமேஷா முத்துமாலை கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன மீனவரின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் கடற்தொழிலுக்கு சென்று காணாமல்போன மீனவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

மணல்காட்டை சேர்ந்த 38 வயதுடைய மீனவரின் சடலமே கரையொதுங்கியுள்ளார்.

சடலமாக கரையொதுங்கிய மீனவர் மணல்காட்டில் இருந்து கடந்த வியாழக்கிழமை (26) அதிகாலை கட்டுமரத்தில் தொழிலுக்காக கடலுக்குள் சென்றுள்ளார்.

கடலுக்கு சென்ற மீனவர் வழமையாக காலை 09 மணியளவில் கரை திரும்பி விடுவார். ஆனால் அன்றைய தினம் அவர் கரை திரும்பாததால், சக தொழிலாளிகள் அவரை தேடி கடலுக்கு சென்ற வேளையில், அவரது கட்டுமரம் மாத்திரம் கடலில் மிதந்த வண்ணம் காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டு மீண்டும் கரை சேர்த்த தொழிலாளிகள் காணாமல்போன மீனவரை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் இன்றைய தினம் அவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.

அதேவேளை, சட்டவிரோத கடலட்டை தொழில் செய்பவர்களின் படகு கட்டுமரத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தி இருக்கலாம் என அப்பகுதி கடற்தொழிலாளர்கள் சந்தேகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆளும்தரப்பின் இருமுகம்

இலங்கை அரசியலில் திருப்புமுனையாகப் போதுமான நம்பிக்கையுடன் அமைந்திருந்த தற்போதைய ஆளும்தரப்பின் செயற்பாடுகள், கடந்த ஆட்சிகளின் சாயலிலேயே விரிகின்றன என்பது துரதிருஷ்டவசமான செய்தி. குறிப்பாக தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும், மக்களாட்சி அடிப்படையிலான மாகாண சபைத் தேர்தல்களையும் நிராகரிக்கும் போக்கானது, இந்த ஆட்சியின் உண்மையான முகத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் (Prevention of Terrorism Act – PTA) என்பது நீண்டகாலமாக தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மீதான ஒரு சட்டமாக இருந்து வந்தது. இந்த சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதாகத் தொடக்கத்தில் கூறிய ஆளும்தரப்பு, இப்போது 'மாற்றீடாக புதிய சட்டம்' என்ற பதில்களைச் சொல்வது, வாக்குறுதியிலிருந்து பின்னடைந்த ஒரு தெளிவான சாட்சி. இதற்கிடையில், நாடாளுமன்றத்தில் அல்லது பொது மக்களுக்கு எதிரொலியாக இதுவரை எவ்வித தீர்மானங்களும், சட்டச் செயல்முறைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தத் தவறான போக்கை லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மிகத் துல்லியமாகவே சுட்டிக்காட்டியுள்ளார். 'சிங்கள மக்களுக்கு ஒரு மொழியில் ஒன்றைக் கூறி, சர்வதேச சமூகத்துக்குச் செல்வாக்கு காட்ட மற்றொரு மொழியில் வேறொன்றைக் கூறுவது' என்பது ஆளும்தரப்பின் இருமுக அரசியலாகவே விளங்குகிறது. இது வெறும் நேரத்தை இழுத்தடிக்கக் கூடிய உத்தியானாலும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள் என்ற உண்மையை மறந்துவிட முடியாது.

இதேபோல், மாகாண சபைத் தேர்தல்கள் பற்றிய ஆளும்தரப்பின் நிலைப்பாடும் மிகவும் கவலைக்கிடத்தக்கது. ஜனாதிபதி உட்பட ஆளும்தரப்பின் முக்கியத்துவமானவர்கள், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மாகாண சபைத் தேர்தல்களும் நடைபெறும் என அளித்த வாக்குறுதிகள், இன்னும் செயல்முறையாகப் பின்பற்றப்படவில்லை. இது மக்களாட்சி அமைப்பின் மூலக்கூறுகளையே புறக்கணிக்கும் செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

மாகாண சபை முறைமை என்பது தமிழர்களின் வரலாற்று நீண்ட அரசியல் கோரிக்கைகளுக்கான மிகக் குறைந்தபட்சமான தீர்வாக 13ஆவது திருத்தம் வழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் தேர்தல் நடத்தாமல் காலம் கடத்துவது, அரசியல் வன்முறைகளுக்கு வழிவகுக்கும், ஜனநாயக அற்ற நிலைதான். தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அடையாளப்படுத்தும் எந்தவொரு வாக்குறுதியையும் கைவிடும் அரசியல், இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாதபடி மேலும் உருட்டிச் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இனநீதி, மக்களாட்சி, மற்றும் நம்பிக்கைக்குரிய ஆட்சி என்று எதையும் பேசிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், ஆட்சிக்குப் பிறகு அதையே மாறுபட்ட மொழிகளிலும் செயல்களிலும் மாற்றுகின்றனர் என்றால், மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் நாடகமே என்பதைக் காண முடிகிறது.

எனவே, ஆளும்தரப்பு செயலில் இறங்கவேண்டும். தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டபூர்வமாக நிறைவேற்றவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றிலும் இரத்து செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும், மனித உரிமைகளுக்கான அடிப்படையாகவும் உள்ளது. அதேவேளை, மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தியே தீர வேண்டும். இது இனநீதிக்கான அடித்தளமாகவே அமையும். தேர்தலை நடத்தாமல் காலம் கடத்தும் அரசியல் இனதற்குரிய உரிமைகளை மறுக்கும் எண்ணத்திலிருந்து இயங்குவதாகவே மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

இந்த உணர்வுகளை அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்ளாவிட்டால், இனநம்பிக்கையும், சமாதானமும், ஜனநாயகமும் வெறும் பேச்சுக்களாகவே முடிந்து போவதற்கான ஆபத்து மிக அருகில் உள்ளதென்பதை அவர்கள் உணரவேண்டும்.

வாக்குறுதிகளை மீறாத, மக்களாட்சி அடிப்படையிலான, நியாயத்தை நோக்கிய ஆட்சி என்பதே மக்கள் எதிர்பார்ப்பு. இதனை நிறைவேற்றுவதே ஆளும்தரப்பின் அறிமுகம் உண்மையான மாற்றமாக மாறுவதற்கான வழியாகும்.

# களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் 2 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குற்பட்ட பல்வேறு பகுதிகளில் களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்

பாடசாலை, ஆலயம், வீடு என மூன்று இடங்களில் தண்ணீர் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் இன்று காலை சரசாலை, மட்டுவில் பகுதியை சேர்ந்த 23 வயதான இரண்டு சந்தேகநபர்களை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டதில் சரசாலை காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 மோட்டர்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்

# செம்மணியைக் கொச்சைப்படுத்தியோர் முகத்தில் அறைந்திருக்கும் ஆதாரங்கள்

## ரெலோ பிரமுகர் சபா குகதாஸ் தெரிவிப்பு

செம்மணி மனிதப் புதைகுழியை கொச்சைப் படுத்தியவர்களுக்கு முகத்தில் அறைந்த ஆதாரம் வெளிவருவதாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இழிவுபடுத்தி ஊடகங்களில் கதறிய சிங்கள இனவாதிகளுக்கும் கடந்த காலத்தில் பேரினவாத அரசுக்கு மீண்டு கொடுத்த தமிழ்க் குழுக்களும் மனிதப் புதைகுழியில் உள்ள எலும்புக் கூடுகள் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இராணுவம் மற்றும் பொலிசார் உடையது எனவும் அத்துடன் சகோதர இயக்கங்களின் உறுப்பினர்களை படுகொலை செய்து புதைத்தவர்களினதும் என ஆதாரம் அற்ற குற்றச் சாட்டுக்களை முன் வைத்தனர்.

இனவாதி விமல் வீரவன்ச ஊடகத்தின் முன்னால் பொய்யுரைக்கும் போது செம்மணி புதைகுழியில் தாயும் கைக்குழந்தையும் கட்டியணைத்தபடியான எலும்புக் கூடு மற்றும் பத்து வயதிற்கு குறைந்த குழந்தைகளின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகப் பெரும் உண்மையை திசை திருப்ப முனைந்த இனவாதிகளுக்கும் கோடரிக் காம்புகளுக்கும் முகத்தில் அறைந்தது போல் ஆதாரம் பதில் வழங்கியுள்ளது.

செம்மணிப் பகுதியில் புதைகுழி ஏற்படுத்தப்பட்ட சம காலத்தில் அப்பகுதி இராணுவ முகாமில் இருந்த சிப்பாய்கள் சாட்சியாக இருக்கும் போது கடந்த கால அரசுகளின் கைக்கூலிகளும் தென்னிலங்கை இனவாதிகளும் யாரைக் காப்பாற்ற செம்மணிப் மனிதப் புதைகுழி விவகாரத்தை திசை திருப்ப முனைகின்றனர்? என்றார்.

# தமிழ் பண்பாட்டு அனைத்துலக மாநாடு ஜூலை 6 கொழும்பில் நடைபெறும்

தஞ்சாவூர் அனைத்துலக பண்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு திருநெறிய தமிழ் சைவ சமயப் பாதுகாப்பு பேரவை, லண்டன் தமிழ் கல்வியகம், பிரான்ஸ் உலக செம்மொழி தமிழ்ச் சங்கம் மற்றும் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ் பண்பாட்டு அனைத்துலக மாநாடு கொழும்பில் ஜூலை 06 அன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை கொழும்பு மாநகர சபை மேயர் வ்ராய் கெலி பல்தஸார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் திருநெறிய தமிழ் சைவசமய பாதுகாப்பு பேரவையின் தலைவர் சசிக்குமார் வரவேற்புரையினையும், பிரதம விருந்தினர் உரையை புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி நிகழ்த்துவார்.

கௌரவ விருந்தினர்களாக மீன்பிடித்துறை அமைச்சர், இராமலிங்கம் சந்திரசேகர், தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அநிருந்தனன் உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இம்மாநாட்டில் இந்தியாவில் இருந்து 50 பேராளர்களும்,தென்னாபிரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சுவிற்சர்லாந்து, நோர்வே, ஜெர்மனி, கனடா, மொரீசியஸ், ரீயூனியன், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் பேராளர்கள், சான்றோர் பங்கேற்கவுள்ளனர்.

முருகப் பெருமான் திருவருளுக்கு பாத்திரமான பசுமை சித்தர் மற்றும் செல்வபாரதம் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கவுள்ளார்கள்.

நடனமாமணி ஸ்ரீமதி பூர்ண புஷ்பகலா வழங்கும் ஸ்ரீ பரத கலா அகாடமி மாணவிகளின் 'அறுபடை வீடு' நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை சார்பில் விக்கிரமசிங்க பதிப்பித்து நித்யானந்தன் அணிந்துரை வழங்கி வெளியிட்ட மாத்தளை மரதன் கிருஷ்ணன் எழுதிய 'இன்னுமொரு குறிஞ்சிப்பூ' நூலும் வெளியிடப்படவுள்ளது.

இம் மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருநெறிய தமிழ் சைவசமய பாதுகாப்பு பேரவையின் தலைவர் சசிக்குமார் மேற்கொண்டுள்ளார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## சீர்திருத்தங்களுக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க தெரிவித்தார்.

தற்போதுள்ள அரசியல் கலாச்சாரம் மாறத் தொடங்கியுள்ளது என்று கூறிய ஜனாதிபதி, அதை ஒரு நிலையான சூழ்நிலையாக உருவாக்கவேண்டும்என்றுவலியுறுத்தினார்.

நாட்டின் அனைத்து துறைகளையும் புதிய நிலைக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்என்றுஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

நாட்டைபுதியநிலைக்குஉயர்த்துவதற்காக செயல்படுத்தப்பட்ட திட்டத்தில், பொதுப் போக்குவரத்துசேவையைவலுப்படுத்துவதில் அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது என்று கூறிய ஜனாதிபதி, தற்போதைய அரசாங்கம் சிறிய அரசாங்கங்கள் மற்றும் தனிப்பட்ட அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி செயல்படும்சகாப்தத்தைமுடிவுக்குக்கொண்டு வந்துள்ளது என்றும் கூறினார்.

ஒரு சமூகமாக பொதுச் சொத்துக்கள் திருடப்படுவதைநாம்அஞ்சவேண்டும்என்றும், அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி செயலகத்தில் 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் 'கனவு இலக்கு' திட்டத்தின் தொடக்க விழாவில் பங்கேற்று உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைக் கூறினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் 'சுத்தமான இலங்கை' திட்டம் ஆகியவை இணைந்துதனியார்துறையின்ஆதரவுடன் பொது-தனியார் கூட்டுத் திட்டமாக 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

இந்தத் திட்டத்தின் நோக்கம், சிறப்புத் தேவைகள்உள்ளசமூகம்உட்படஅனைத்து பயணிகளின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதி செய்யும் ஒரு சுத்தமான, அழகான ரயில் நிலைய அமைப்பை நாட்டில் உருவாக்குவதாகும்.

## நாடாளுமன்றம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவிருக்கும் வரவு செலவுத் திட்டம் தொடர்பானதேவையைநிறைவேற்றுவதற்காக இந்த அவசரக் கூட்டம் கூட்டப்படுவதாக நாடாளுமன்றத்தின் துணைச் செயலாளர் நாயகமும், பணியாளர்கள் பிரிவின் தலைவருமான சட்டத்தரணி சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

## சிங்களத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் குறித்து வினவியபோதுமேற்கண்டவாறுகுறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத்தேர்தலைவிரைவாகநடத்துவதற்கு இந்த ஆளும்தரப்பு முன்னேற்றகரமான எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அதேபோன்று பயங்கரவாத தடைச்சட்டத்தையும் இரத்துச் செய்வதற்கு வெளிப்படையான தீர்மானங்கள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இந்த ஆளும்தரப்புப் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இவ்வாறான பின்னணியின் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆளும்தரப்பு விரைவாக நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபை முறைமைக்கு எதிராகவே ஜேவிபி செயற்பட்டது. பெரும்பான்மை மக்கள் மத்தியில் மாகாண சபை முறைமை குறித்துத் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தியது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாகஇரத்துச்செய்வதாகஆளும்தரப்பு தொடக்கத்தில் குறிப்பிட்டது. ஆனால் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டம் என்று ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது.

நாட்டு மக்களுக்கு சிங்கள மொழியில் ஒன்றை குறிப்பிட்டுவிட்டு, சர்வதேசத்துக்கு ஆங்கிலமொழியில்பிறிதொன்றைகுறிப்பிட்டு காலத்தை கடத்தும் வகையில் ஆளும்தரப்புச் செயற்படுகிறது. தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டத்தின் பிரகாரம் ஆளும்தரப்புநிறைவேற்றவேண்டும்என்றார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளின் உரிமையாளர்களில் 8 பேர் அந்தக் காணிகளை ஜனாதிபதி மாளிகைக்காக ஒப்படைப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்றும் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த விவகாரம் குறித்து நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலகாவிடம் விசாரித்தபோது, முதலீட்டாளரிடம்மாளிகையைஒப்படைப்பதற்கு முன்பு, நில உரிமை தொடர்பாக உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கவேண்டும் என்று அவர் கூறினார்.

நிலத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். கனேடிய முதலீட்டாளர் உட்பட முதலீட்டாளர்கள் குழு, பல்வேறு முதலீடுகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ளஜனாதிபதிமாளிகையைகையகப்படுத்த ஏற்கனவே முன்வந்துள்ளது.

2010 மற்றும் 2015க்கு இடையில் கட்டப்பட்ட யாழ்ப்பாண ஜனாதிபதி மாளிகை, காங்கேசன்துறை பகுதியில் சுமார் முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அந்த நிலத்தில் பதினைந்து ஏக்கரில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2025இல் வெளியிடப்பெற்றது